# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:119** **தேதி:-19.07.2016**

### மத்திய சங்கம் நடத்திய ”டாக்டர் B.R.அம்பேத்கார்-125” கருத்தரங்கம்

அன்பார்ந்த தோழர்களே,

புதுடெல்லியில் நடைபெறும் BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழுவின் ஒரு பகுதியாக ”டாக்டர் B.R.அம்பேத்கர்-125” கருத்தரங்கம், 19.07.2016 அன்று மாலை 4 மணிக்கு கர்வால் பவனில் நடைபெற்றது. BSNL ஊழியர் சங்கத்தின் புரவலர் தோழர் V.A.N.நம்பூதிரி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மத்திய செயற்குழு உறுப்பினர்களுடன், கார்ப்பரேட் அலுவலகம், NTR, ஹரியானா, உபி(மேற்கு), ராஜஸ்தான் உள்ளிட்ட பல மாநிலங்களிலிருந்து நூற்றுக்கணக்கான தோழர்கள் பங்கேற்றனர்.

BSNL ஊழியர் சங்கத்தின் துணைப் பொது செயலாளர் தோழர் சுவபன் சக்கரவர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். சட்ட மேதை அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்திற்கு BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர் சிங் மாலை அணிவித்தார். அதன் பின்னர் BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் தனது அறிமுக உரையில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பெருமையை எடுத்துரைத்ததுடன், தற்போது BSNLல் உள்ள SC/ST ஊழியர்களின் பிரச்சனையான பதவி உயர்வு தேர்வுகளில் DOP&T உத்தரவுகளை முழுமையாக BSNL நிர்வாகம் அமுலாக்குவதில்லை என்பதை சுட்டிக்காட்டி அதற்காக BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து போராடுவதையும் எடுத்துரைத்தார். SC/ST ஊழியர்கள் தொழிற்சங்கத்தில் சேரும் உரிமையை BSNL நிர்வாகம் கொடுக்க மறுத்து உத்தரவு போட்டுள்ளதை சுட்டிக்காட்டி அந்த உரிமையினை போராடி பெற்று தருவோம் என்று உறுதி அளித்தார்.

தலீத் ஷோசன் முக்தி மோர்ச்சா என்ற அமைப்பை சார்ந்த தோழர் மமதா தனது சிறப்புரையில் அம்பேதகர் அவர்களின் கருத்துக்களை தற்போது மிகப் பொறுத்தமாக அமுலாக்க வேண்டியதின் அவசியம் தொடர்பாகவும், தலீத் மக்களில் ஒரு சிலர் மட்டும் முன்னேறி இருப்பதை சுட்டிக்காட்டி அதனால் ஒட்டு மொத்த தலீத் மக்களும் முன்னேறுவார்கள் என்று கூறும் சிலரை கடுமையாக விமர்சித்தார். ஒட்டு மொத்த தலீத் மக்களும் முன்னேற அம்பேதகரின் கருத்துக்களை நடைமுறையாக்க தொடர்ந்து பாடுபட வேண்டும் என்று கூறினார்.

பின்னர் உரையாற்றிய CITU சங்கத்தின் பொது செயலாளர் தோழர் தபன்சென் SC/ST ஊழியர்களின் சட்டபூர்வ உரிமைகளைக் கூட தொழிற்சங்கங்களின் போராட்டங்கள் காரணமாகவே அமுலாக்கப்பட்டதை விரிவாக எடுத்துக் கூறியதுடன், தற்போது அம்பேத்காரின் கருத்துக்களுக்கு எதிரானவர்கள் கூட அவரது 125ஆவது பிறந்த நாளை கொண்டாடுவதையும், அவரின் கருத்துக்களை அவர்கள் திரித்து கூறுவதையும் எடுத்துரைத்தார். அம்பேத்கார் தனது திறமைகளின் காரணமாகவே, அன்று நிகழ்ந்துக் கொண்டிருந்த தீண்டாமைகளுக்கு எதிராக போராடி முன்னணிக்கு வந்தவர் என்று அவரது திறமைகளை எடுத்துரைத்து, இன்றும்

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக தொழிற்சங்கங்களும் போராட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

டாக்டர் அம்பேத்கருக்கு உண்மையிலேயே பெருமை சேர்க்கும் வகையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கத்தை BSNL ஊழியர் சங்கத்தின் அமைப்பு செயலாளர் தோழர் R.S..சவுகான் நன்றி கூறி முடித்து வைத்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(அபாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**




**அம்பேத்கருக்கு மாலையிடும் தலைவர் பல்பீர்**




**மேடையின் தோற்றம்**




**பொதுசெயலாளர் தோழர் P.அபிமன்யு**




**புரவலர் தோழர் V.A.N.நம்பூதிரி**




தோழர் தபன் சென்




தோழர் ம்மதா




தோழர் சுவபன்



ப்ங்கேற்பாளர்களின் ஒரு பகுதி





பார்வையாளர்களின் காட்சி